
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1024**

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

31



# அரசியலமைப்பைப் பாதுகாக்க வைக்கப்பட்ட வாதங்கள்!

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

**வ**க்பு சட்டம் 1954-ஆம் ஆண்டு முதன் முதலில் உருவாக்கப்பட்டது. அதன்பின்னர், 1959,1964 மற்றும் 1969-ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்டுள்ளன. 1984, 1995 மற்றும் 2013 ஆண்டுகளிலும் வக்பு சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அப்போதெல்லாம் அடிப்படையான சட்டக் காரணங்கள் இருந்தன. சிறப்பான விவாதங்கள் நடைபெற்றுள்ளன. நாடாளுன்றத்தில் வெள்ளை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஒருமித்த கருத்து எட்டப்பட்டுள்ளன. ஆனால், அவ்வாறான எந்த நடைமுறைகளையும் பின்பற்றாமல், 2025 வக்பு சட்டத் திருத்தத்தில் விவாதங்களுக்கு முறையான பதில் அளிக்காமல், அடிப்படையான காரணங்களும் இல்லாமல் வக்பு சட்டத் திருத்தத்தை நிறைவேற்றியது ஒன்றிய பா.ஜ.க. அரசு.

வக்பு சட்டத் திருத்தத்தை எதிர்த்த எதிர்க்கட்சிகளின் குரலாகவும், முகமாகவும் இருந்த அரசியல் இயக்கம் தி.மு.க.தான். வக்பு சட்டத் திருத்தத்துக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்ததுடன், அதில் உறுதியோடு இருந்தது.

2025 ஏப்ரல் 03-ஆம் தேதி அன்று செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்கள், வக்பு சட்ட திருத்த மசோதா, நாட்டில் மத நல்லிணக்கத்தை சீர்குலைத்து முஸ்லிம் சமூகத்தை பாதிக்கக்கூடும் என்பதை அழுத்தமாகக் குறிப்பிட்டார். “நாங்கள் தீர்மானத்தை நிறைவேற்றிய போதிலும், பெரும்பாலான அரசியல் கட்சிகள் வக்பு சட்டத்தை எதிர்த்தபோதிலும், மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது. மக்களவையில் மசோதாவுக்கு எதிராக 232 பேர் வாக்களித்திருப்பது சாதாரண எண்ணிக்கை அல்ல” என்றார்.

“இந்த மசோதாவை எதிர்க்க வேண்டும் என்பது மட்டுமல்லாமல், முழுமையாகத் திரும்பப்பெற வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு. இது அரசியலமைப்பின் மீதான தாக்குதல். இந்த நடவடிக்கை வகுப்புவாத நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும்” என்றும் உறுதியாக குறிப்பிட்டார் கழகத் தலைவர்.

### நாடாளுமன்றத்தில் கழகக் குரல் !

இதே குரலை நாடாளுமன்றத்தில் எதிரொலித்தார் கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா. வக்பு சட்டம் விவாதங்களின்போது, நாடாளுமன்றத்தில் மக்களவை உறுப்பினர், கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா காரசாரமாக உரை நிகழ்த்தினார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் இச்சட்டம் தொடர்பாக, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைக் குறிப்பிட்டு, தனது உரையை தொடங்கியவர், “வக்பு மசோதாவுக்கு எதிராக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. எங்கள் நிலைப்பாடு இதுதான். தீர்மானத்தின் வரிகள் இவை” என அவற்றை வாசித்தார்.

### உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது!

“நாடாளுமன்றத்தில் முன்மொழியப்பட்ட வக்பு திருத்த மசோதா, சிறுபான்மையினர் உரிமைகள், மத சுதந்திரம் மற்றும் அரசியலமைப்புக்கு எதிரானது; வக்பு உருவாக்கப்பட்டதன் நோக்கத்துக்கு எதிரானது; உச்சநீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரானது; தேவையற்றது மட்டுமின்றி குழப்பமானதும்கூட. இதை நிறைவேற்றினால் வக்பு நிறுவனங்களை முடக்குவதுடன், இஸ்லாமிய சமூகத்துக்குக் கேடுகள் விளையும். அதனால், தமிழ்நாடு சட்டப்பேரவை வக்பு திருத்த மசோதாவைக் கைவிடுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்துகிறது” என விரிவாக வாசித்து, பல விளக்கங்களை அளித்தார்.

“கடந்த காலங்களில் வக்பு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்ட போதெல்லாம், அதற்கு அடிப்படை காரணங்கள் இருந்தன. நாடாளுமன்றத்தின் ஒருமித்த கருத்து அடிப்படையில் மட்டுமே திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளன. 1970-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட வக்பு விசாரணைக்குழு சமர்ப்பித்த விரிவான அறிக்கையின் அடிப்படையில் வக்பு (திருத்தம்) சட்டம், 1984 நடைமுறைக்கு வந்தது. 1970-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட குழு அளித்த அறிக்கை, 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஏற்கப்பட்டது, அதன் அடிப்படையில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

1970-ஆம் ஆண்டில் வக்பு சட்டத் திருத்தங்களுக்கு எதிராக போராட்டங்கள் நடைபெற்ற நிலையில், அந்தத் திருத்தங்கள் 1984-ஆம் ஆண்டுதான் நடைமுறைக்கு வந்தன. குறிப்பாக 1970-ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தில் ஏராளமான பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தாலும், 1984-ஆம் ஆண்டில், நாடாளுமன்றம் இரண்டு திருத்தங்களை மட்டுமே நடைமுறைப்படுத்த முடிந்தது.

ஒன்று வழக்கிடுவதற்கான கால வரம்பு (Limitation) குறித்தது. இது வக்பு சொத்துக்களுக்கு 30 ஆண்டுகளாக நீட்டிக்கப்பட்டது. இரண்டாவது கைவிடப்பட்ட (Evacuee) சொத்துக்களுக்கும் கூட இச்சட்டம் பொருந்தும் என்பது. வேறு எந்த திருத்தங்களும் செயல்படுத்தப்படவில்லை; அதன்பிறகு, 1995-ஆம் ஆண்டு வக்பு சட்டம் திருத்தப்பட்டது.

இந்தத் திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தபோதெல்லாம் நியாயமான அடிப்படையில், நீதிமன்றங்கள் வழங்கிய அறிவுரைகள், வழிகாட்டுதல்கள் அடிப்படையில், செய்யப்பட்டன. அதுதொடர்பாக ஆ.ராசா அளித்த சட்ட விளக்கம் நாடாளுமன்றத்துக்குப் புதிதாக இருந்தது.

1995-ஆம் ஆண்டு வக்பு சட்டத்திருத்தம் எவ்வாறு நடைமுறைக்கு வந்தது?

1995-ஆம் ஆண்டு வக்பு சட்டத்தின்படி, ‘குறிக்கோள்கள் மற்றும் காரணங்களின்’ (Reasons and Objects) அறிக்கையின் பத்தி 2-இல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

“வக்பு சட்டத்தில் விரிவான திருத்தங்கள், வக்பு (திருத்தம்) சட்டம், 1984 மூலம் செய்யப்பட்டன. அவை பெரும்பாலும் அனைத்து மட்டங்களிலும் வக்புகளின் நிர்வாகம் குறித்து விசாரிக்க, 1970-ஆம் ஆண்டு டிசம்பரில் அமைக்கப்பட்ட வக்பு விசாரணைக் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டவை. வக்பு (திருத்த) மசோதா மீதான விவாதத்தின்போது உறுப்பினர்களால் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாகவும் இருந்தன.”

இதன்படி, நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு, 1995-ஆம் ஆண்டு வக்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது.

அதேபோல் 2013-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வக்பு சட்டத்தின் அடிப்படை என்ன? அச்சட்டத்தின் ‘காரணங்கள் மற்றும் நோக்கங்களின்’ பத்தி இரண்டைப் படியுங்கள்:

இந்திய முஸ்லிம் சமூகத்தின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகுறித்த விரிவான அறிக்கையைத் தயாரிப்பதற்காக ஒரு உயர் மட்டக்குழு அமைக்கப்பட்டது, அதன் அறிக்கையை நவம்பர் 17, 2006 அன்று பிரதமரிடம் சமர்ப்பித்தது. இது ‘சச்சார் குழு அறிக்கை என்று அழைக்கப்படுகிறது.” இப்படி அதற்கு முன்னரான சட்டத் திருத்தங்களுக்கு இருந்த அழுத்தமான காரணங்களை தரவுகளோடு விளக்கினார்.

“நாடாளுமன்றத்தில் ஒரு இஸ்லாமிய உறுப்பினர்கூட இல்லாத ஒரு கட்சிதான் சிறுபான்மையினரின் உரிமைகள் காக்கப்பட ஒரு மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறது. அவர்கள் கட்சியிலிருந்து இந்த மசோதாவை ஆதரிக்க ஒரு இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினர் கூட இல்லை. ஒரு இஸ்லாமிய நாடாளுமன்ற உறுப்பினருக்குகூட வாய்ப்பளிக்க மனமில்லாதவர்கள்தான் மதச்சார்பின்மையைப் பாதுகாப்பது குறித்து எங்களுக்கு பாடம் எடுக்கிறார்கள்” என வக்பு சட்டத் திருத்தம் தொடர்பான விவாதங்கள், பொதுக்கூட்டங்களிலும் கழகத்தின் உறுதியை பறைசாற்றினார் கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா.

> “ கடந்த காலங்களில் வக்பு சட்டத் திருத்தங்கள் கொண்டு வரப்பட்ட போதெல்லாம், அதற்கு அடிப்படை காரணங்கள் இருந்தன. நாடாளுமன்றத்தின் ஒருமித்த கருத்து அடிப்படையில் மட்டுமே திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளன. ”

...தொடரும்

## கடமை தவறும் தேர்தல் ஆணையம்!

**வா**க்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) என்ற பெயரில், இந்திய தேர்தல் ஆணையம், நாட்டில் மிகப்பெரிய குளறுபடிகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

மகாராஷ்டிரா உள்பட 5 மாநில தேர்தல்களில், வாக்குத் திருட்டு என்கிற மோசடி முறைகேடுகளில் ஈடுபட்டுதான் பா.ஜ.க. வெற்றிபெற்றது என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டின. இப்போது, வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் (SIR) என்கிற பெயரில், தேர்தல் ஆணையமே பா.ஜ.க.வுக்கு ஆதரவான நிலையைக் கடைப்பிடித்து, இந்திய ஜனநாயகத்தைச் சிதைத்து வருகிறது. பீகார் மாநிலத்தில் இந்த வகையில் ஆட்சியைப் பிடித்துள்ளது பா.ஜ.க.

இப்போது தமிழர்களின் வாக்குகளை நீக்கவும், பீகார் மக்களை தமிழ்நாட்டின் வாக்காளராக மாற்றவும்தான் இந்த எஸ்.ஐ.ஆர். கொண்டுவரப்பட்டதா என சந்தேகம் எழுந்துள்ளது.

ஏனென்றால், இதற்கு முன்பு தேர்தல் நடந்த மாநிலங்களில் ஒரு மாநிலத்தில் வாக்காளராக இருப்பவர்கள், இன்னொரு மாநிலத்துக்கு வந்து வாக்களித்திருக்கிறார்கள். ஒரே ஒரு வீட்டு முகவரியில் 66 போலி வாக்காளர்கள் இருந்திருக்கிறார்கள். ஒருவருடைய வீட்டு முகவரியில் 500 வாக்காளர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என ஆதாரத்துடன் செய்திகள் வந்தன.

இந்த நிலையில், தமிழ்நாட்டிலும் மோசடியாக வெளிமாநில வாக்காளர்களைச் சேர்க்கத் துணிந்துள்ளது தேர்தல் ஆணையம். குறிப்பாக, வாக்காளர் பட்டியல் திருத்த (SIR) படிவத்தில், சமர்ப்பிக்க தேவையான ஆவணங்களின் பட்டியலில், “01.07.2025-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்ட பீகாரின் சிறப்பு தீவிர திருத்தத்தின் வாக்காளர் பட்டியலின் பிரதி” எனக் குறிப்பிட்டுள்ளது தேர்தல் ஆணையம். அதாவது, அம்மாநிலத்தில் வாக்காளராக உள்ளவர், தமிழ்நாட்டில் வாக்களிக்க தகுதியானவர் என்கிறது.

இது முறைகேடு இன்றி வேறென்ன?

தமிழர்களின் வாக்குகளை நீக்கவும், பீகார் மக்களை தமிழ்நாட்டின் வாக்காளராக மாற்றத்தான் இந்த அவசரமா? கடமை தவறிக் கொண்டிருக்கிறது தேர்தல் ஆணையம்.

## ஃப்ளாஷ்பேக்





ஆர்.எஸ்.வசந்த்ராஜ்

### வாழ்நாள் புகைப்படம்!

2016-ஆம் ஆண்டு நவம்பர் 14-ஆம் தேதி எனது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் இன்றைய கழக தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை எனது தாயாருடன் சந்தித்து, வாழ்த்துப் பெற்று புகைப்படம் எடுத்து மகிழ்ந்தேன். தலைவரை தாயாருடன் சென்று பார்த்தது, நான் அவருக்கு அளித்த மகிழ்ச்சியாக நினைத்துக் கொள்வேன். வாழ்நாள் புகைப்படம்.

**- ஆர்.எஸ்.வசந்த்ராஜ்,**
**மாவட்டத் துணை அமைப்பாளர்,**
**விளையாட்டு மேம்பாட்டு அணி, ஆம்பூர், திருப்பத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### விவசாயிகளை அரவணைத்த கலைஞர்!

1978-ஆம் ஆண்டு ஏப்ரலில் மின்சாரக் கட்டண குறைப்பு, விவசாயக் கடன்கள் வசூலை நிறுத்தி வைத்தல் உள்ளிட்ட 9 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி, விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அன்றைய அ.தி.மு.க. அரசின் காவல்துறை தடியடி, துப்பாக்கிச் சூடு நடத்தியதில், பலர் கொல்லப்பட்டனர். கடுமையாக கண்டித்த கலைஞர், உண்மை கண்டறியும் குழு ஒன்றை அமைத்தார். தமிழ்நாடு முழுவதும் அடக்குமுறை எதிர்ப்பு வாரம் கடைப்பிடித்து, விவசாயிகளுக்கு ஆதரவாக நின்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131